**நிவித்திகல பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 24 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 யூன் 17 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஒக்தோபர் 13 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3.4 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 01 இன் 21 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பின்வரும் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(i) பாதீடப்பட்ட தொகையையும் உள்ளபடியான தொகையையும் ஒப்பீடு செய்யும் கூற்று
(ii) காசுப்பாய்ச்சல் கூற்று
(iii) முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பினை உள்ளடக்கிய அட்டவணை

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) அரசாங்க வங்கியொன்றில் பேணப்பட்டுச் செல்கின்ற சபைக்குரிய நிலையான வைப்பிற்குரிய 2013 ஒக்தோபர் 06 ஆந் திகதி முதல் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான ரூபா 12,708 தொகையான வட்டிப் பணம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருமானச் செலவினக் கணக்கு மற்றும் பொழிப்பு வருமானப் பதிவேட்டின் (பி.ச. 19) பிரகாரம் 02 வருமானத் தலைப்புக்களில் ரூபா 190,950 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(இ) 2012 ஆம் ஆண்டின் கடன்கொடுத்தோருக்கான ரூபா 84,513 தொகையான மிகை ஒதுக்கம் திரண்ட நிதியத்தின் மூலம் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் முத்திரைக் கட்டண கடன்பட்டோர் மீதியான ரூபா 5,991,844 தொகையினை விஞ்சி முன்னைய ஆண்டிற்காக மீளாய்வாண்டின் போது

கிடைத்த முத்திரைக் கட்டண பெறுவனவுகள் ரூபா 2,120,191 தொகைக்காக முத்திரைக் கட்டணக் கணக்கு வரவு வைக்கப்பட்டு திரண்ட நிதியத்தில் செலவு வைத்து நாட்குறிப்புப் பதிவுகளின் மூலம் சீராக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்காமையினால் ஆண்டிறுதியில் கடன்பட்டோர் கணக்கின் மீதி அப்பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் நடைமுறைச் சொத்துக்கள் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் திரண்ட நிதியக் கணக்கும் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) திரண்ட நிதியத்தில் சீராக்கப்பட வேண்டிய ரூபா 195,805 தொகையான நிலுவை சம்பளக் கொடுப்பனவு உறுப்பினர் சம்பள மீளளிப்புக் கணக்கில் சீராக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் செலவினம் அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் 27 கணக்கு விடயங்களுக்குரிய பேரேட்டுக் கணக்குகளின் பிரகாரமான மீதிகளிலும் உபயோகப் பதிவேடுகளின் பிரகாரமான மீதிகளிலும் ரூபா 3,832,924 கூட்டுத்தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் அந்த வேறுபாட்டிற்கான காரணங்களைக் கண்டறிந்து பேரேட்டுக் கணக்குளில் தேவையான சீராக்கங்களைச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 7,340,290 கூட்டுப்பெறுமதியான 02 வெளிப் பொறுப்புக்கள் தொடர்பாக எழுத்துமூல சான்றுகள் இன்மையால் கணக்காய்வின் போது திருப்திகரமானதாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஆ) ரூபா 796,541 பெறுமதியான கொள்வனவுகளுக்குரிய 06 கொடுப்பனவுச் சந்தர்ப்பங்கள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமானதாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(இ) இறுதி நிதிக்கூற்றுக்களின் பிகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சபைக்குரிய நிலையான வைப்பு முதலீட்டின் பெறுமதி ரூபா 1,776,111 ஆக இருந்த போதிலும், வைப்புச் சான்றிதழ் பௌதீக பரிசோதனையின் படி அப்பெறுமதி ரூபா 565,473 ஆனமையால் முதலீட்டுப் பெறுமதி ரூபா 1,210,638 தொகைக்கான வைப்புச்சான்றிதழோ அல்லது வங்கியின் உறுதிப்படுத்தல் சான்றிதழோ சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கைக் குடியரசின் 2005 யூன் 08 ஆந் திகதிய 396/18 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட விதி | தொடர்புடைய விதிக்கு முரணாக ரூபா 60,000 கூட்டுத்தொகையான பணம் சபைக் கூட்டங்களுக்காக சமுகமளிக்காத 08 உறுப்பினர்களுக்காக 12 சந்தர்ப்பங்களின் போது உறுப்பினர் படியாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| நிதிப்பிரமாணம் இலக்கம் 396(ஈ) | வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 14,285 கூட்டுப்பெறுமதியான 07 காசோலைகள் தொடர்பாக உரிய பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**1.3.6 அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்**

பாதிடப்பட்ட நிதி ஏற்பாடு அல்லது குறைநிரப்பு ஒதுக்கீடின்றி 16 செலவின விடயங்களுக்குரிய நிதி ஏற்பாட்டை விஞ்சி ரூபா 2,142,623 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 494,779 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,452,599 ஆக இருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

2012 ஆம் ஆண்டின் நிதிச் செயற்பாடுகளின் மிகை ரூபா 4,452,599 ஆக இருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டின் செயற்பாட்டுப் பற்றாக்குறை ரூபா 494,779 ஆனமையால் ஆண்டின் போது நிதி விளைவுகளில் 111 சதவீத வீழ்ச்சியினைக் காண்பித்தது. வருமான அதிகரிப்பு வேகத்தைவிட அதிகரித்த வேகத்தில் செலவினம் அதிகரிப்பும், வாடகை வருமானம், அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் ஏனைய வருமனங்களில் ஏற்பட்ட குறைவும் இதற்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தன.

### 2.3 வருமான நிருவாகம்

**2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| -------------------- | ------------- | ------------- | ------------- |
| | ரூபா | ரூபா | ரூபா |
| | (000) | (000) | (000) |
| வீதவரியும் வரியும் | 1,367 | 1,624 | 1,075 |
| வாடகை | 3,792 | 3,025 | 90 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 672 | 181 | 435 |
| ஏனைய வருமானம் | 22,237 | 18,856 | 453 |

**2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட மற்றும் சேகரித்த வருமானத்தை ஒப்பீடுசெய்த போது வாடகை வருமானத்திலும் அனுமதிப்பத்திரக் கட்டண வருமானங்களில் மதிப்பிடப்பட்ட வருமானத்தைவிட சேகரிக்கப்பட்ட வருமானத்தில் முறையே 22 சதவீதம் மற்றும் 73 சதவீத குறைவைக் காட்டியது.

**2.3.3 வாடகை**

i. நிவித்திகல சந்தைக்கு அருகில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஆட்டிறைச்சி மற்றும் கோழி இறைச்சிக் கடைகள் கேள்வி கோரப்படாமல் மீளாய்வாண்டிற்காக ரூபா 48,000 தொகையில் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக மதிப்பீட்டு அறிக்கையேனும் பெறப்படாது வாடகைப்பெறுமதி தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் படி வாடகைப் பணம் தீர்மானிக்கப்பட்ட முறை தொடர்பாக கணக்காய்விற்கு விளக்கப்பட்டிருக்கவில்லை. அந்த வாடகை உடன்படிக்கை 2013 யூலை 15 ஆந் திகதி அதாவது 6½ மாதகாலம் தாமதித்து கையொப்பமிடப்பட்டிருந்ததுடன் வாடகையாளரினால் சனவரி முதல் உடன்படிக்கைத் திகதி வரை உரிய வாடகைப் பணம் மற்றும் பிணைவைப்புப் பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. வாடகையாளரால் கடையை வாடகைக்கு எடுக்கும் சந்தர்ப்பத்தின் போது அந்தக் கடைக்கு மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 30,625 தொகையினை மாதாந்த வாடகையில் ஈடுசெய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

ii. சந்தை வளவில் அமைந்துள்ள 01 ஆம் இலக்க மீன் கொட்டில் கூறுவிலை சமர்ப்பித்த இரண்டாவது கேள்விதாரருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த வாடகையாளர் ரூபா 15,917 தொகையான மாதாந்த வாடகைப் பணத்தை உரிய பிரகாரம் செலுத்தியிருக்கவில்லை. உடன்படிக்கை கையொப்பமிடல் 2013 யூலை 15 ஆந் திகதி வரை 05 மாதகாலம் தாமதமாகியிருந்தது.

iii. சபைக்குச் சொந்தமான பொதுச்சந்தையின் 01 கடையிலிருந்தும் வாராந்த சந்தையில் 03 கடைகளிலிருந்தும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவையான காலம் 02 மாதங்கள் முதல் 7½ மாதங்கள் வரை அறவிடவேண்டிய தொகையில் ரூபா 23,500 மேலும் அறவிடவேண்டியிருந்தது.

### 2.3.4 ஏனைய வருமானம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூடும் கூடாரங்களை வாடகைக்கு வழங்கும் போது மிகவும் குறைந்த தொகையொன்று அறவிடப்படுவதுடன் அக்கட்டணம் நாளதுவரையாக திருத்தப்படாமையின் காரணமாக 07 தினங்களுக்காக ரூபா 200 என்ற குறைந்த பெறுமதியொன்று அறவிடப்பட்டிருந்தது. அவ்வாறு அறவிடப்படுகின்ற சிறிய கட்டணத் தொகை உரிய பிரகாரம் அறவிடப்படாதிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2014 பெப்ரவரி 26 ஆந் திகதி வரையில் பல்வேறு நபர்களிடமிருந்தும் நிறுவனங்களிலிருந்தும் 110 சந்தர்ப்பங்களின் போது ரூபா 31,200 தொகை சபைக்கு அறவிடவேண்டியிருந்தது. மூடும் கூடாரங்களை வாடகைக்கு வழங்கிய பதிவேட்டைப் பரிசோதனை செய்தபோது பொருட்களைக் கொண்டு சென்ற இடம் தெளிவாகக் காட்டப்படாமை, பொருட்களை மீளக் கையளிக்கும் திகதி காணப்படாமை, எடுத்துச்சென்ற எண்ணிக்கை குறிப்பிடப்படாமை மற்றும் திறந்த நிலையில் பாதுகாப்பின்றி களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமை போன்ற குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) மீளாய்வாண்டின் போது அதிகாரப் பிரதேசத்தில் வாடகை அறவிடக்கூடிய பகிரங்கப்படுத்தப்பட்ட சகல அறிவித்தல்கள், பெனர் மற்றும் பெயர்ப் பலகைகளுக்காக வாடகை அறவிடப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் அந்த வருமானம் ரூபா 2,880 அளவிலான குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது.

### 2.3.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்களின் பெறுமதி ரூபா 2,664,284 ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வருடாந்த பாதீட்டின் மூலம் ஒதுக்கப்படுகின்ற உறுப்பினர் நிதி ஏற்பாடுகள் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்த வேண்டியதுடன் நலன்புரி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்த முடியாதிருந்த போதிலும், அதற்கு முரணாக 19 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,450,030 பெறுமதியான நலன்புரி பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2012 யூன் மாதம் முதல் 02 வருமானக் கட்டுப்பாட்டாளர் பதவிகள் வெற்றிடமாக இருந்தமையின் காரணமாக சபையின் அறிவித்தல் பலகை, வியாபார அனுமதிப்பத்திரம் போன்ற துறை நடவடிக்கைகள் மூலம் பெறமுடியுமான வருமானம் இழக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமான எஸ்ஜீ ஆர்எஸ் 0780 ஆம் இலக்க பெகோ லோடர் இயந்திரம் மீளாய்வாண்டின் போது 1224 மணித்தியாலம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் போது அதில் 50 மணித்தியாலக் காலத்திற்காக ரூபா 60,792 தொகையான வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. இந்தக் காலம் மொத்த சேவைக் காலத்தில் 4 சதவீதமான குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட காலத்தை ஒப்பிடும் போது கிடைத்த வருமானம் மிகவும் குறைவான பெறுமதியைக் கொண்டிருந்தது. சபைக்குரிய கடமைகளுக்கு மேலதிகமாக தலைவரினதும் உறுப்பினர்களினதும் ஆலோசனையின் படி தொடர்ச்சியாக இயந்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மதிப்பீடோ அல்லது மேற்பார்வையே மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் அதற்கான பணத்தை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது பெகோ இயந்திர செயற்படுத்துனர் சம்பளமாக ரூபா 196,749 தொகையும், இயந்திரத்தைப் பழுதுபார்க்கும் நடவடிக்கைகளுக்காக ரூபா 778,831 தொகையும் உள்ளடங்கலாக ரூபா 975,580 கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்தது. ஆண்டின் போது உழைக்கப்பட்ட ரூபா 60,792 வருமானத்துடன் செலவினத்தை ஒப்பீடுசெய்த போது, வருமானம் உழைத்தலின் சதவீதம் 06 சதவீதத்தை விட குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது.

(இ) பல வருடங்களாக முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 47,526 தொகையான கடன்பட்டோர் மின்சாரக் களஞ்சிய மீதி தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2013 பெப்ரவரி 26 ஆந் திகதி முதல் மார்ச் 03 வரை தாய்லாந்து சுற்றுலாவிற்காக இரண்டு உறுப்பினர்களுக்கு ரூபா 90,000 படி சபை நிதியத்திலிருந்து செலவினங்களைச் செய்வதற்காக உள்ளூராட்சி விடயப்பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும் உரிய செலவினம் வெளிப்படையாக அன்றி மேற்கொள்ளப்பட்டிருந்தது. உள்ளூராட்சி நிறுவனங்களில் அல்லது அரசாங்க நிறுவனங்களில் நிதியத்தைச் செலவிட்டு வெளிநாட்டு கல்விச் சுற்றுலாவிற்காக அதன் மூலம் நிறுவனங்களுக்கு நேரடியாக நலன்கள் கிடைக்குமாயின் மாத்திரமே பங்குபற்ற முடியும். உரிய நிறுவனம் அல்லது அதற்காக செலவாகின்ற சகல செலவினங்களும் வசதிகளும் செய்யப்பட வேண்டிய போதிலும், வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் எதற்கானது என எவ்வித பதிவுகளுமின்றி 2013 பெப்ரவரி 19 ஆந் திகதி ரூபா 180,000 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், வெளிநாட்டு சுற்றுலாவிற்காக பங்குபற்றுபவர்கள் நாட்டிலிருந்து வெளியேறுவதற்காக கௌரவ ஆளுனரின் அனுமதி பெறவேண்டிய போதிலும் அதன் படி நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் பயிற்சியின் இறுதியில் பெற்ற அறிவை உள்நாட்டு ரீதியாக பயன்படுத்திக்கொள்ளும் முறை தொடர்பான அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 250 - 0584 ஆம் இலக்க கெப் வாகனம் தொடர்பாக மீளாய்வாண்டின் போது ரூபா 842,590 தொகையான பழுதுபார்த்தல் செலவினம் செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 437,649 தொகை கடன்கொடுத்தோர் பொறுப்புக்களாகும். இந்த கெப் வாகனம் ஓட்டத்திற்கு தகுதியான நிலையில் காணப்படாமை கணக்காய்வுத் திகதியான 2014 பெப்ரவரி 26 ஆந் திகதி வரையிலும் சப்ரகமுவ மாகாண சபையின் அபிவிருத்தி, வடிவமைப்பு மற்றும் இயந்திர உபகரண அதிகாரசபையில் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டிருந்தது.

(ஆ) மேற்கூறப்பட்ட இலக்கம் குறிப்பிடப்பட்ட வாகனத்திற்கு 2013 பெப்ரவரி 18 ஆந் திகதி உறுதிச்சீட்டு இலக்கம் 212 இன் மூலம் ரூபா 107,998 பெறுமதியான 04 டயர்கள் போடப்பட்டிருந்ததுடன் அதில் ஒரு டயரில் கம்பிகள் வெளிக்கிழம்பியதால் ஓட்டத்திற்கு தகுதியற்ற நிலைக்குள்ளாகி மீண்டும் 2013 ஒக்தோபர் 21 ஆந் திகதி உறுதிச்சீட்டு இலக்கம் 1172 இன் மூலம் ரூபா 16,500 தொகை செலவில் மேலும் 01 டயர் புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. ஓட்ட நிலையில் காணப்படாத வாகமொன்றிற்காக இவ்வாறு டயருக்காக செலவினங்களை மேற்கொண்டமை கேள்விக்குரிய நிலைமையாக இருந்தது.

### 3.5 ஒப்பந்த நிருவாகம்

மாகாண சபை நிதிஏற்பாட்டின் கீழ் ரூபா 98,749 தொகையான மதிப்பீட்டுத் தொகையின் அடிப்படையில் தொலொஸ்வல கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மூலம் தொலொஸ்வல கோயிலின் றித்ம ரங்க கலாத்தன கட்டிடத்திற்கு சாந்துபூசல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

இறுதிப் பகுதி பணக்கொடுப்பனவு அறிக்கையின் படி மதிப்பீட்டின் விடய இலக்கம் 2 இன் கீழ் பக்கச் சுவர் மேல்பகுதியில் சாந்துபூசல் உரிய பிரகாரம் சீமெந்து, மணல் கலவை ஈடுபடுத்தப்படாமையால் பரிசோதனைச் சந்தர்ப்பமான 2014 பெப்ரவரி 26 ஆந் திகதியளவில் சாந்துப்பூசு இலகுவாக கழன்று செல்லும் நிலைக்கு உள்ளாகியிருந்தது.

i. கட்டிடத்தின் தரைக்கு சாந்து பூசல் மதிப்பீட்டு விடய இலக்கம் 1 இன் கீழ் சீமெந்து, மணல் சாந்து பூசப்பட்டு மேல்பகுதியாக சிவப்பு மற்றும் கறுப்பு சீமெந்தால் நடுப்பகுதி பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அந்த நிலம் அனேக இடங்களில் கீறப்பட்டு வெடித்திருந்தது. அவ்வாறான 05 இடங்கள் மாத்திரம் மீளத் திருத்தப்பட்டிருந்ததுடன் கட்டுக்கள் வெடித்திருந்த பகுதியை உடைத்துப் பரிசோதனை செய்த போது அதன் கலவை மிகவும் இலகுவாகக் கழன்று உடைந்து போகக்கூடியதாக இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது. அதன் படி நிறைவேற்றப்பட்ட ரூபா 51,642 தொகையான வேலைப்பகுதி பயனற்ற நிலைக்கு உள்ளாகியிருந்தது.

ii. மதிப்பீட்டு விடய இலக்கம் 2 இன் கீழ் சுவர் சந்து பூசல் 12 அடி நீளம், 17.5 அடி அகலமான 209 சதுர அடி இறுதிப்பகுதி கொடுப்பனவின் கீழ் மேலதிக பட்டியல் தயாரிக்கப்பட்டு அதற்காக ரூபா 9,388 தொகை நிறைவேற்றப்படாத வேலைகளுக்காகச் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவையின் 5(7) இன் பிகாரம் நிதி மற்றும் களஞ்சியம் தொடர்பாக போதியளவான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

18 செலவின விடயங்களுக்குரிய ரூபா 3,950,597 தொகையான நிதி ஏற்பாடு எவ்வித பயன்பாட்டிற்கும் ஈடுபடுத்தப்படாது முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) நிதிக் கட்டுப்பாடு
(உ) ஒப்பந்த நிருவாகம்